278—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***9633—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியரை கிராமத்தில் உள்ள கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியரை கிராம நிருவாக அலுவலக பழைய கட்டடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், பொதுப் பணித் துறைமூலம் அது தற்போது இடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கிராம நிருவாக அலுவலகம் தற்போது ஊராட்சி மன்றத்திற்குப் பாத்தியப்பட்ட அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் தொடர்பாக நடப்பு நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு பெற்று, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் புளியரை கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் என்பது கேரள மாநிலம், திருவிதாங்கூர் சமஸ்தான காலத்திலிருந்து இருந்த பகுதியிலிருந்து அகற்றி,* temporary *ஆக ஓர் இடத்திற்கு மாற்றியிருக்கின்றார்கள். எனவே, உடனடியாக பழைய இடத்திலேயே புதிய கட்டடத்தைக் கட்டித் தர*

2018 ஜூலை 5]

வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணி உடனடியாக நிறைவேற்றித் தரப்படும் என்று ஏற்கெனவே சொன்னார்கள். அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக நிறைவேற்றித் தர வேண்டும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 387 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்களைச் சீரமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான கிராம நிருவாக அலுவலகக் கட்டடமும், அதேபோன்று வட்டாட்சியர் அலுவலகக் கட்டடமும் மற்றும் தங்களுடைய கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடமும் தாங்கள் விரும்பினால் உடனடியாகக் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா என்பது மறைந்த முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அது 30 வருவாய் கிராமங்கள், 4* town panchayats, *2 நகராட்சிகளைக் கொண்ட ஒரு பகுதியாகும். அந்தத் தாலுகா அலுவலகம் தற்போது* temporary *ஆக* Agricultural Marketing*–க்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகின்றது. இதனை நகர எல்லையிலேயே அமைக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி இருக்கின்றேன். இது பற்றி பல முறை இங்கே பேசி இருக்கின்றேன். மறைந்த முதல்வர் அவர்கள்கூட என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்திருந்தார்கள். பல்வேறு நிலைகளில் அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய வகையில் ஒட்டுமொத்த மக்களும் மனிதச் சங்கிலி, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் என பல்வேறு நிலைகளில் அதனை வலியுறுத்தி வருகின்றோம். இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு அம்மா*

அவர்கள் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு இதை நிறைவேற்றித் தர வேண்டும். ஏனென்று சொன்னால், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் எப்படி தென் மாவட்ட மக்களுடைய கோரிக்கையை ஏற்று AIIMS மருத்துவமனையை டெல்லியிலிருந்து கொண்டுவர முடிகிறதோ, அதேபோன்று கடையநல்லூர் தொகுதி கோரிக்கையினை அவர் ஏன் தொடர்ந்து கனிவோடு பரிசீலிக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். மேலும், தற்போது 3 இலட்சம் மக்களுடைய கையெழுத்தினையும் பெற்று அதனைச் சமர்ப்பிக்க இருக்கின்றோம். எனவே, நீங்கள் ஒரு முறை வந்து பாருங்கள். உங்களிடம் 50 முறை சொல்லி இருப்பேன், பல நேரங்களில் சொல்லியிருக்கின்றேன். தாலுகா அமைத்துக் கொடுத்தீர்கள், அதற்கான கட்டடத்தையும் அமைத்துக் கொடுத்தீர்களென்றால், அதில் உங்களுக்குத்தான் நல்ல பெயர்.

முற்பகல் 11–05

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று கவனத்தைச் செலுத்தி, மாற்றுச் சிந்தனையோடு அந்தப் பணியைச் செய்தார்கள் என்று சொன்னால், கண்டிப்பாக கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தை, கடையநல்லூர் நகரின் எல்லையிலேயே அமைத்துத் தர முடியும் என்பதே அப்பகுதி மக்களின் எண்ணமாக இருக்கிறது. புளியங்குடியைச் சேர்ந்த அ.இ.அ.தி.மு.க.–வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள்கூட இருக்கிறார். அவரும் அந்தக் கருத்தைத்தான் வலியுறுத்துகின்றார். யாரும் இந்தக் கருத்திலிருந்து மாறுபடவில்லை. எனவே, அந்தப் பகுதியின் ஒட்டுமொத்த மக்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் ஏற்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: கண்டிப்பாக கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தை கடையநல்லூர் நகர எல்லையிலேயே அமைத்துத் தர வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய அந்தப் புதிய வட்டங்களுக்கெல்லாம் உடனடியாக புதிய கட்டடங்களும் உருவாக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படையிலேதான் கடையநல்லூரில் உருவாக்கப்பட்ட புதிய வட்டத்திற்கு ரூ.261 இலட்சம், அதாவது ஏறத்தாழ ரூ.2.50 கோடிக்கும் மேல் நிதியை ஒதுக்கி, அந்தக் கட்டடத்தை புதிதாக, அழகாக வடிவமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நிதியினை ஒதுக்கீடு செய்தார்கள். கடையநல்லூரில் தற்போதுள்ள அந்தப் பகுதியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று தற்காலிகமாக நாம் இடத்தைத் தேர்வு செய்தோம். ஆனால், நகர்ப் பகுதியிலே அதற்குத் தகுந்த இடங்கள் இல்லாத காரணத்தினால்தான், அந்தப் பணி முடியவில்லை. தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அப்பகுதி மக்களுடைய கோரிக்கையைத்தான் சொல்கிறார்கள். மக்கள் எளிமையாக, விரைவாக அரசு நலத் திட்டங்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திலேதான் சொல்கிறார்கள். அதில் வேறு நோக்கம் இல்லை. அதனை அரசு முழுமையாகப் புரிந்துகொண்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் ஏற்கெனவே அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தயாராக இருக்கிறது என்று நானே சொல்லியிருக்கிறேன். தற்போது நீர்நிலைப் புறம்போக்கு நிலத்தில் கட்டடம் கட்ட உச்ச நீதிமன்றத்தின் தடையாணை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதுகுறித்து நன்றாக அறிவார்கள். அது தவிர, நகர்ப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டினால், அந்த இடத்தில் நாளைக்கே பூமி பூஜை போட்டு கட்டடம் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. தற்போது, அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள இடம் நகர்ப் பகுதியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பவில்லையென்றால், அரசு அந்த இடத்தில் அலுவலகத்தை நிச்சயமாக அமைக்காது. அங்கு பல்கலைக்கழகத்தின் மனோ கல்லூரி உள்ளிட்டவை இருக்கின்றன. அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள இடம் சரியாக இருக்காது என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துதான் நிதியொதுக்கீடு செய்யப்பட்டும், இதுவரையில் அந்தப் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு*

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்கு முக்கியத்துவம் வழங்குகிற அரசு என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற வகையிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) நிதியொதுக்கீடு செய்யப்பட்டும், இதுவரையில் கட்டடம் கட்டும் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குத் தகுந்த இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடையாளம் காட்டுவார்களேயானால், நிச்சயமாக, அங்கு பூமி பூஜை போடப்பட்டு, கட்டடம் கட்டும் பணி உடனடியாகத் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, கடந்த மூன்று கூட்டத் தொடராக இதற்கான மூலக் கேள்வி வரும் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் வரவில்லை. தொகுதி மக்களினுடைய அவசியம் கருதி கேட்கக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நிபந்தனைப் பட்டாக்களோடுகூடிய நிலங்களை நிபந்தனையை மீறி விற்பனை செய்யக் கூடாது என்கிற ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால், சில நேரங்களில் சூழ்நிலையின் காரணமாக குறைந்த விலையில் அந்த நிலங்களை அதன் உரிமையாளர்கள் விற்க முன்வருகிறபோது, சில real estate அதிபர்கள், குறைந்த விலைக்குக் கிடைக்கின்ற காரணத்தினாலே, நிபந்தனையை மீறி விற்கப்படுகிற அந்த நிலங்களை விலைக்கு வாங்கி, அதனை வீட்டுமனைகளாகப் பிரித்து விற்கக்கூடிய சூழ்நிலையில், மக்கள் அறியாமையின் காரணமாக அப்படிப்பட்ட நிபந்தனையை மீறி விற்கப்படுகிற வீட்டுமனைகளை வாங்குகிறார்கள். அந்த வகையில், எங்களுடைய பெருந்துறை பகுதியில் பல்வேறு இடங்களில் சுமார் 50–க்கும் மேற்பட்ட வீடுகள், நிபந்தனையை மீறி வீட்டுமனைகளை வாங்கி, பட்டா நிலத்தில் வீடு கட்டி 50 ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிபந்தனையை மீறி வீடு கட்டியிருக்கிற*

2018 ஜூலை 5]

அந்தப் பகுதி மக்களுக்கு, அதனை வரன்முறை செய்து பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு வருவாய்த் துறையைக் கவனித்தார்கள்; அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக, இந்த* condition*-ஐ ஏன் கொடுக்கிறோம் என்றால், சாமானியர்களுக்கு அந்த நிலம், அவர்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்; ஏழையெளியோர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்களுக்கு எந்தக் கஷ்ட சூழ்நிலை வந்தாலும்கூட, இந்த நிலம் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான், அன்னை தமிழ் பூமியிலே சாமானியர்களுக்கும் சொந்தமாக ஒரு நிலம் இருக்க வேண்டும் என்கிற அடிப்படையிலேதான், அந்த நிலம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்ததால், இதைப்பற்றி நன்றாக அறிவார்கள். நிலத்திற்கு இரண்டு விதமான ஆவணங்கள் உண்டு. ஒன்று, பத்திரப் பதிவுத் துறையின் மூலமாக வழங்கப்படுகிற* sale deeds *அதாவது, விற்பனைப் பத்திரங்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, பட்டா மாற்றம், சிட்டா, அடங்கல் போன்ற வருவாய்த் துறை ஆவணங்கள் இருக்கின்றன.* Conditional patta *என்று சொல்லக்கூடிய நிபந்தனைகளுடன்கூடிய அந்தப் பட்டாக்களை மறைத்து,* guideline value *கொடுத்தால் பத்திரப் பதிவுத் துறையிலே அவர்கள்* survey number *சரியாக இருக்கிறதா,* guideline value *சரியாக இருக்கிறதா, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தியிருக்கிறார்களா என்பதைப் பார்த்து பதிவு செய்துவிடுவார்கள். ஆனால், வருவாய்த் துறையில் பட்டா மாற்றம் கேட்டு வருகிறபோது, அந்த நிபந்தனைகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துதான், நாம் அதைச் செய்கிறோம்.*

[2018 ஜூலை 5

முற்பகல் 11–10

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை வரன்முறை செய்ய முடியுமா என்று ஒரு கூடுதல் தகவலைக் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதை வரன்முறை செய்ய முடியாது. அதுபோன்ற நிகழ்வுகளில், இரத்து செய்து மீண்டும் அந்த ஏழை எளியவர்களுக்கு, சாமானியர்களுக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்புதான் சட்டத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ஏனெனில் ஏற்கெனவே அந்த அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள், குடியிருப்பவர்கள், ஏழை எளியவர்கள் நலன் கருதி, வரன்முறை செய்கிற One time special Scheme தற்போது பரிசீலனையில் இருக்கிறது. விலை மதிப்பு அதிகமாக இருக்கக்கூடிய நகரப் பகுதிகளிலெல்லாம் எப்படி ஆய்வு செய்ய வேண்டும் என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவிலே அந்த வரன்முறையோடு இதையும் சேர்க்க முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை 4 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இன்றைய காலகட்டத்தில் சுமார் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை இருக்கக்கூடிய அந்த மாவட்டத்தில் சில சான்றிதழ்களைப் பெற வேண்டுமானால், காலதாமதமாகிறது. அங்கே இருக்கக்கூடிய வட்டாட்சியாளர்களுக்கும் வேலைப்பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், 4 வட்டங்களாக இருப்பதை 6 வட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் உடனடியாக 4 வட்டங்களை 6 வட்டங்களாகப் பிரிக்கக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பொதுவாக தொகுதி மக்கள் நலன் குறித்து கேட்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவரும் ஒரு வட்டம் வேண்டும் என்றுதான் கேட்பார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டுமொத்தமாக மாவட்டத்திற்கே மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசுமீது நம்பிக்கை வைத்து இரண்டு புதிய வட்டங்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அந்த வகையில், 72 வட்டங்களை நம்முடைய வருவாய்த் துறை வரலாற்றில், மக்களுடைய தேவையை அறிந்து உருவாக்கிய ஓரே அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான். அந்த வகையில் 32 வருவாய் மாவட்டங்களிலும் நமக்கு புதிய வட்டங்களின் தேவை இருக்கின்றன. வருவாய்த் துறை மூலமாக அதனை ஆய்வு செய்து கொண்டுதான் இருக்கிறோம். ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும், மக்கள்தொகைப் பரப்பளவு, உயர்மட்டக் குழுவால் தேர்வு செய்வது போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் விதிமுறைகளாக இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த விதிமுறைகள் அனைத்தும் தகுதியுள்ளதாக இருக்கின்றன. நிதிநிலைமைக்கேற்ப ஒவ்வொன்றாக அதனை அறிவித்து வருகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த திரு. ராஜேஷ் குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் போன்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே அங்கு புதிய வட்டம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, மிக விரைவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கடைக்கோடியில் இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி புதிய வட்டத்தை அமைக்கும் அந்தப் பணியை மிக விரைவாக மேற்கொள்வதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 279, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*